மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதைப்பற்றி அவ்வப்போது பரிசீலனை செய்து எங்கெங்கே க்ளஸ்டர்ட் அதாவது சேர்ந்தாற்போல் வேலை செய்யக்கூடிய தொழிற்சாலைகளை ஃபேக்டரி சட்டத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்று அரசு கருதுமேயானால் அப்பேர்ப்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கெல்லாம் ப்ராவிடெண்ட் பண்டு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எங்கெங்கு இப்படி எல்லாம் இருக்கிறது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுப்பார்களே யானால் அதையும் பரிசீலனை செய்யலாம்.

மதுரையில் அங்காடிகள் மையம்.

*வினா எண். 565 — திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரையில் ரூ. 144 லட்சத்தில் அங்காடிகள் மையம் அமைத்திடும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ், மதுரையில் ரூ. 40 லட்சம் செலவில் அங்காடி மையம் அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) இதற்கான வரைபடமும், மதிப்பீட்டை யும் அனுப்பியுள்ளார். இத்திட்டம் நடப்பு ஆண்டில் எடுத்துக் கொள்ளயிருக்கிறது.

தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் மருத்துவ மனைகள்.

வினா எண். 566— திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா —

(அ) தொழிலாளர்கள் மத்தியில் காசநோய், க்ஷயநோய் இரண்டும் மிக வேகமாக அதிகரித்து வருவதைத் தடுக்கவும் உடனே வைத்திய உதவி கிடைக்கவும் அரசு தொழிலாளர் நல வாரியத்தின் கீழ் ஆஸ்பத்திரிகளை அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

1979 மார்ச் 30]

(ஆ) இந்த நோய்கள் பரவுவதை அறிய சென்னை, கோவை மதுரை, திருச்சி, நெய்வேலி, தூத்துக்குடி போன்ற தொழிலாளர்கள் குவிந்துள்ள இடங்களில் ஒரு கணக்கெடுப்பு (Survey) நடத்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின்கீழ் தற்சமயம் இதுபோன்ற திட்டம் ஏதுமில்லை. எனினும் இது குறித்து சில கருத்துக்கள் அரசின் ஆய்வில் உள்ளன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, தொழிலாளர்கள் சேர்ந்தாற்போல் வாழ்கின்ற இடங்களில் இந்த காச நோய் வெகு சீக்கிரம் பரவுவதால் பல்வேறு தொழிலாளர்கள் இந்தக் காச நோய்க்கு இரையாகிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கென்று ஈ. எஸ். ஐ. ஆஸ்பத்திரி என்று தனியாக இருந்தாலும் காச நோய்க்காக தனி ஆஸ்பத்திரி இல்லை. ஆகவே, அதற்கான ஏற்பாட்டை அரசு கவனிக்குமா? கோவை மாவட்டத்தில் பெருந்துறையில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரியின் ஒரு பகுதியை தொழிலாளர்களுக்கென்று ஒதுக்குவதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இரண்டாவது கேள்விக்கு இப்போது நான் பதில் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். முதற் கேள்விக்கு மட்டும் பதில் சொல்கிறேன்.

தொழிலாளர் நல ஆணையர் அவர்கள் மாநில காச நோய் அலுவலருடன் கலந்து ஒரு விரிவான பொருளாதாரத் திட்டம் ஒன்றை தீட்டும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். தொழிலாளர் நல வாரியம் அதில் 50 சதவிகித செலவினை ஏற்றுக்கொள்ளும்படி கொள்கை அளவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டம் இறுதியாக்கப்படுவதற்குமுன் தொழிலாளர் நல ஆணையாளர் அவர்களின் கருத்துருவை 1978–79 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தில் ஏற்கப்பட்டு 1978–79 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறையில் 1978–79 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தில், கைத்தறி மற்றும் பீடி தொழிலாளர்களிடையே ஏற்படும் காசநோயை கண்டறிவதற்கான திட்டம் உள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 14·41 இலட்சம் செலவாகும் என்று சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை மதிப்பிட்டுள்ளது. இதற்காக ஏற்படும் செலவை தொழில்,

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு, மற்றும் சுகாதாரம், மற்றும் குடும்ப நலத்துறைகளால் சமமாக பங்கிட்டுக்கொள்ளலாம் என்று சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை கருதுகிறது. பகுதி 2 திட்டத்தில் முன்பே அடையாள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதால், அத்துறையின் பகுதி 2 திட்டத்திற்கான செயற் குறிப்பை அனுப்ப வேண்டாமென்று சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை முடிவெடுத்துள்ளது. இத்திட்டம் முதல்வர் அவர்களின் ஒப்புதல் பெற்று அரசின் ஆய்வில் உள்ளது. அதாவது முதல்வர் அவர்களின் ஒப்புதல் பெற்றாகிவிட்டது. அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விக்கான பதிலை மாண்புமிகு அமைச்சரவர்கள் தயவு செய்து சுருக்கமாக கொடுக்க வேண்டும். துணைக் கேள்விகளுக்கான பதிலை சுருக்கமாகப் போட்டால் புதிதாகத் துணைக் கேள்விகள் பிறக்காது. ஆகவே பதில் சொல்லும்போது சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காச நோயானது ஏழைகளின் மத்தியிலும், தொழிலாளர்கள் மத்தியிலும் மின் வேகத்தில் பரவுவதாகக் குறிப்பிட்டார்கள். மாநில அளவில் அந்த மாவட்டத்தில் மருத்துவ மனையில் அதிக படுக்கைகளுக்கான வசதி இல்லை. ஆகவே, இந்தக் காச நோயை விரிவாக ஆராய்ச்சி செய்ய காச நோய் ஆராய்ச்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா? இரண்டு சய நோய்.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் நேராக உட்கார்ந்து இருக்கும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டிருக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது அரசு பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள் பரிசீலனை இல்லாமல் அதற்கு அங்கீகாரம் வழங்கினார்களா ?

THE HON. THIRU. S. RAGHAVANANDAM : The details are being worked out.